செய்தி வெளியீடு எண்: 432 நாள் : 07.08.2013

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன் படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் ஆகஸ்ட் 2013 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்ட முகாம் 10.08.2013 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூடம்<br>செயின்ட் சேவியர்தெரு, ஏழு கிணறு ,சென்னை 1 (முருகன் தியேட்டர்அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை தொடக்கப்பள்ளி ,<br>க.எண் . 91, சேனியம்மன் கோயில் தெரு,<br>தண்டையார்பேட்டை, சென்னை 81 (ஸ்டான்லி புறநகர் மருத்துவமனை அருகில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>2 A பள்ளிசாலை, மாதவரம் நெடுஞ்சாலை, பெரம்பூர் , சென்னை 11<br>( ஸ்டேட் பாங்க் அருகில்) |
| 4 | அண்ணாநகர் | மார்னிங் ஸ்டார் மெட்ரிக்குலேஷன் பள்ளி<br>ப.எண் 77 / பு எண் 110, தெற்கு கங்கையம்மன் கோயில் முதல் தெரு, சூளைமேடு,<br>சென்னை 94 ( அண்ணாசிலை எதிரில்) |
| 5 | அம்பத்தூர் | அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளி,<br>மதுரவாயல், சென்னை 95 ( மதுரவாயல் தபால் நிலையம் அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | எவர்வின் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி,<br>எண் 12/3 , எஸ்.ஜே அவன்யூ, ரெட்உறில்ஸ் ரோடு, கொளத்தூர்,சென்னை 99<br>(மூகாம்பிகை தியேட்டர் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | ஜெயகோபால் கரோடியா அரசினர் மேல்நிலைப்பள்ளி<br>மந்தவெளி மெயின் ரோடு, மாதவரம் சென்னை 60 (மாதவரம் பஸ் நிலையம் அருகில்) |
| 8 | ஆவடி | மாநகராட்சி சமுதாயக்கூடம்<br>சண்முகபுரம், எண் 10/8 புழல், சென்னை 66 (சண்முகபுரம் பஸ் நிலையம் எதிரில்) |
| 9 | தி.நகர் | ஸ்ரீராமகிருஷ்ணன் மிஷன் சாரதா வித்யாலயா மெட்ரிக் ஹையர் செகன்டரி ஸ்கூல்<br>1, முத்துரங்கன் சாலை, தி,நகர், சென்னை 17, ( தி.நகர் பஸ் ஸ்டாண்ட் அருகில்) |
| 10 | மயிலாப்பூர் | சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி,<br>13, பீமண்ண தோட்டத்தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை 18<br>( அபிராமபுரம் காவல் நிலையம் அருகில்) |
| 11 | பரங்கிமலை | பல்லாவரம் நகராட்சி அலுவலக வளாகம், குரோம்பேட்டை, சென்னை 43<br>(குரோம்பேட்டை பஸ் நிலையம் அருகில்) |
| 12 | தாம்பரம் | தாம்பரம் நகராட்சி அலுவலக வளாகம், முத்துரங்கம் முதலி தெரு, மேற்குதாம்பரம்,<br>சென்னை 45 (தாம்பரம் பஸ் நிலையம் அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | ஆல் ஏஞ்ஜெல்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி,<br>130 ஏ, பாரதிதாசன் காலனி , கே.கே.நகர், சென்னை 78 |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூடம்,<br>38. மாடல் பள்ளி ரோடு , ஆயிரம் விளக்கு, சென்னை 6 |
| 15 | சேப்பாக்கம் | சென்னை உயர்நிலைப்பள்ளி,<br>எண் 103, வீரபெருமாள்கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை 4 |
| 16 | சோழங்கநல்லூர் | பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி,<br>எண் 102, கங்கை அம்மன் கோயில் தெரு, காரப்பாக்கம், சென்னை 97 |

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9